**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**சுருக்கு முறை வழக்கு எண். 248/2024.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி –1 ).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜீவா | ஜாதி | |
| தந்தை பெயர் | பாலகிருஷ்ணன். | தொழில் | கிராம நிர்வாக அலுவலர். |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 37/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2026.

**(2, 3, 5, 8, 9, 12 ஆகிய எதிரிகள் ஆஜர். 1, 4, 6, 7, 10, 11 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

(1) நான் தற்போது, தேனி, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, உப்பார்பட்டி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலகராகப் பணிபுரிந்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். கடந்த 23.10.2023 ஆம் தேதியன்று, காலை 11.30 மணிக்கு அலுவலகம் நிமித்தமாக நானும், என் அலுவலக உதவியாளரும், தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது, புரட்சித் தமிழகம் கட்சியின் மாநிலத் தலைவர் மதியவன் என்பவரின் தலைமையில், தேனி காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வரை போடி, சில்லமரத்துப்பட்டி மேல்நிலைப் பள்ளியின் மாணவியின் தீண்டாமை வன்கொடுமை சம்பந்தமாக எதிரிகள், சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்து, சாலை மறியலில் ஈடுபட்டு, சட்டம் மற்றும் ஒழுங்கிற்கு பிரச்சனை ஏற்படுத்தும் விதம் செயல்பட்டார்கள்.

(2) நான் அது சம்பந்தமாக தேனி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்தப் புகார் **அ.சா.ஆ.1** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) நான் பொதுவாக அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு பணிக்கு வருவேன் என்றால், 09.00 மணிக்கு வருவேன். நான் அந்த சமயத்தில் பி.சி.

பட்டியில் குடியிருந்தேன். பி.சி. பட்டி வேறு கிராம நிர்வாக அலுவலகத்திற்கு உட்பட்டது என்றால், சரிதான். அல்லிநகரம் வேறு கிராம நிர்வாக அலுவலகத்திற்கு உட்பட்டது என்றால், சரிதான். எங்கு நான் பணிபுரிகிறேனோ, அந்த கிராம நிர்வாக அலுவலத்திற்குட்ட பகுதியில்தான் வசிக்க வேண்டும் என்றால், சரிதான். கிராம நிர்வாக அலுவகத்தில் அன்றாட நிகழ்வுகளை பொதுநாட் குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடப்படும் என்றால், சரிதான். பொதுநாட்குறிப்பில் குறித்து வைத்துக்கொண்டுதான், ஆட்சிய அலுவலகத்திற்கோ அல்லது மேல் அதிகாரிகளை சந்திக்கச் செல்ல வேண்டும் என்றால், சரிதான். ஆட்சியர் அலுவலகத்திற்குத்தான் சென்றேன் என பொதுநாட் குறிப்பில் குறித்து வைத்தேனா? என்றால், இல்லை. வெளியில் பலகையில் எழுதி வைப்பேன்.

(2) நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் எத்தனை மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் சென்றேன் என்றால், 10.30 மணி ஆகும். எனது அலுவலகத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 3 கிலோ மீட்டர் தூரமிருக்கும். நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். எவ்வளவு நேரத்தில் ஆட்சியர் அலுவலகம் செல்லலாம் என்றால், 1/2 மணி நேரம் ஆகும். எனது புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ எத்தனை மணிக்கு அலுவலகத்திலிருந்து சென்றேன் என்ற குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் S.P. அலுவலகத்தை கடந்துதான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும் என்றால், சரிதான். S.P. அலுவலகத்திற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் இடையே 500 மீட்டர் தூரமிருக்கும்.

(3) S.P. அலுவலகம் முன்பும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பும் எப்போதும் போலீசார் பாதுகாப்புப் பணியில் இருப்பார்கள் என்றால், சரிதான். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை ஆட்சியர் அலுவலகத்திலும் S.P. அலுவலகத்திலும் மக்கள் குறைதீர்க்கும் மனுக் கொடுப்பார்கள் என்றால், சரிதான். அன்றைய தினம் S.P. அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். அன்றைய தினம் பல்வேறு கட்சி சார்பாக மனுக் கொடுப்பார்கள் என்றால், சரிதான். எனக்கு, எதிரிகள் எந்த கட்சி அமைப்பில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுத் தெரியாது என்றால், சரிதான். S.P. அலுவலகம் முன்பும், கலெக்டர் அலுவலகம் முன்பும் C.C.T.V. கேமிரா பொருத்தப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல், புரட்சித் தமிழகம் கட்சி மாநிலத் தலைவர் மதியவன் தலைமையில், S.P. அலுவலகத்தில் புகார் கொடுக்கப்பட்டதாக, புகாரிலும், போலீசார் விசாரணையிலும் தெரிவித்துள்ளேன் என்றால், சரிதான்.

(4) எதிரிகள், சில்லமரத்துப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தீண்டாமை வன்கொடுமை நடந்தது சம்பந்தமாக நிர்வாகத்தினர்மீது நடவடிக்கை எடுக்காதது சம்பந்தமாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல், சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற விவரத்தை புகாரிலோ, போலீசார் விசாணையில் சொல்லியுள்ளேனா? என்றால், சொல்லியுள்ளேன். சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டம் செய்ததாக நான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. கட்சி ரீதியாவோ, அமைப்பு ரீதியாகவோ புகார் கொடுக்க வருபவர்களை போலீசார் போட்டோ எடுப்பார்கள் என்றால், சரிதான். அதுபோல், சாலை மறியலோ மற்றும் ஆர்ப்பாட்டமோ செய்தார்கள் என்றால் போட்டோ மற்றும் வீடியோ எடுப்பார்கள் என்றால், சரிதான்.

(5) பொதுமக்கள் யாரும் இடையூறு ஏற்படுவதா புகார் கொடுத்தார்களா? என்றால், இல்லை. எதிரிகள் இடையூறு செய்திருந்தால் புகார் கொடுத்திருப்பார்கள் என்றாலும், அவர்கள் இடையூறு செய்யாததால்தான் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால், சரியல்ல. சம்பவம் சுமார் 20 நிமிடங்கள் நடந்தது. அதன்பின்னிட்டு நான் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால், 12.30 மணிக்குச் சென்றேன். காவல் நிலையம் சென்றுதான் புகாரைத் தயார் செய்தேன் என்றால், சரிதான். புகாரை காவல் அதிகாரிகள்தான் தட்டச்சு செய்தார்கள் என்றால், சரியல்ல. நான்தான் காவல் நிலையத்தில் தட்டச்சு செய்தேன். நான் சொன்னதுபோல், சொன்ன மாதிரியான சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் S.P. அலுவலகத்திற்கு புகார் கொடுக்கத்தான் சென்றார்கள் என்றாலும், அவர்களைத் தடுத்து கைது செய்துள்ளனர் என்றாலும், பின்னிட்டு என்னை காவல் நிலையம் வரச் செய்து, ஏற்கனவே தட்டச்சு செய்து வைத்திருந்த புகாரில் என்னிடம் கையொப்பம் வாங்கியுள்ளார்கள் என்றால், சரியல்ல.

(6) ஏற்கனவே கைது செய்து வைத்திருந்த நபர்கள்மீது புகார் பெறவேண்டி என்னிடம் புகார் பெறப்பட்டது என்றால், சரியல்ல. நான் அன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லவில்லை என்றாலும், நான் அரசு அலுவலர் என்பதால், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றிருந்தால் பொது நாட் குறிப்பு புத்தகத்தை போலீசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு செல்லாததால்தான் ஒப்படைக்கவில்லை என்றாலும், சரியல்ல. புகார் சம்பந்தமாக என்னை எப்போது போலீசார் விசாரித்தார்கள் என்றால், மதியம் 01.30 மணியளவில் என்னை

விசாரித்தார்கள். நான் சொன்னதுபோல், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.21 18:53:04 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**